(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

06.12.2019 STC. 154/2018 PW1 Name:Jagadheeswaran

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி.,**

எஸ்.டி.சி.384/2018 வழக்கில் சாட்சியளித்த சாந்தகுமாரின் மாமனார் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நான் தற்பொழுதும் ரிக் தொழில் செய்துவருகிறேன் என்றால் சரிதான். இந்த ரிக் தொழிலில் கிடைக்கக்கூடிய வரும் வரவு செலவு கணக்குகள் உள்ளது என்றால் இல்லை. எனது தொழிலில் மாதம் 25,000 முதல் 30,000 வரை வருமானம் வருகிறது. அதை நான் வங்கி கணக்கில் வரவு வைப்பது உண்டா என்றால் வரவுக்கும் செலவிற்கும் சரியாக உள்ளது. எனக்கு எவ்வளவு பூமி உள்ளதென்றால் சீனாபுரத்தில் 10 ஏக்கர் உள்ளது அதில் 2 ஏக்கர் விவசாய பூமியும் மீதமுள்ளது மானாவாரி பூமியாகும். மேற்படி விவசாய பூமியை வைத்து நான் எந்த வங்கியிலும் கடன் வாங்கவில்லை என்றால் சரிதான். விவசாயத்தில் வருமானம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வருமானத்தை காட்டுவதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளதா என்றால் எதுவுமில்லை. எதிரியை பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். இளங்கோவின் மூலமாகத்தான் எதிரி தெரியும் என்றால் ஆமாம். இளங்கோவை நான் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் தேவையென்றால் விசாரிக்க தயாராக உள்ளேன். வழக்கு காசோலையை வங்கியில் யார் செலுத்தினார்கள் என்றால் நான்தான் செலுத்தினேன். அந்த செக் கலெக்சன் மெமோவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையானது என்னுடைய வங்கிகணக்கில் தாக்கல் செய்துள்ளார் அதனால்தான் மேற்படி மெமோவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருப்பூரில் உள்ள இந்துஸ்தான் வங்கியில் கடன் கேட்டு நான் எப்பொழுது மனு தாக்கல் செய்தேன் என்றால் 2018 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் தாக்கல் செய்துள்ளேன். அந்த வங்கி

எனக்கு கொடுத்த கணக்கு விவரபட்டியல்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்சொன்ன கடனானது எனது தொழிலுக்காக வாங்கியது. நான் கடனாக கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.6,00,000/- இருந்ததாக காட்ட என்னிடம் ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இந்த 6,00,000/- ரூபாய் எனக்கு எவ்வாறு கிடைத்ததென்றால் எனது சொந்த ஊர் சீனாபுரத்தில் உள்ள இடத்தை விற்ற பணம் இருந்தது . அதைதான் நான் கடனாக கொடுத்தேன். மேற்படி பூமியை யாருக்கு எவ்வளவு தொகைக்கு விற்றேன் என்றால் பத்திரத்தை பார்த்தால் சொல்ல முடியும். நான் விற்றதாக சொல்லப்படும் பூமியின் கிரைய பத்திரத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் எவ்வளவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் ரூ.1,50,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பணத்தை கிரையம் பெற்ற நபர் எனக்கு எவ்வாறு கொடுத்தார் என்றால் ரொக்கமாக கொடுத்தார். மேற்சொன்ன கிரைய பத்திரத்தின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் நான் தாக்கல் செய்ய உள்ளேன். இவ்வழக்கில் காசோலை வங்கியிலிருந்து திருப்பப்பட்டபோது இந்த வழக்கு காசோலை தவிர வேறு ஏதேனும் பணப்பரிவர்த்தனை இருந்ததா என்றால் இல்லை. என்னுடைய அறிவிப்பிலும் புகாரிலும் எனக்கும் எதிரிக்கும் ஏற்கனவே பணப்பரிவர்த்தனை இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியல்ல. எனவே அறிவிப்பில் கண்டுள்ள விவரங்கள் எல்லாம் நான் கூறிய விவரங்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் அறிவிப்பிலும் புகாரிலும் கூறியுள்ள விவரங்கள் தவறு என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் எத்தனை நபர்கள் இருந்தோம் என்றால் நான் இளங்கோ மற்றும் எதிரி மட்டும்தான் இருந்தோம். அந்த காசோலையை பூர்த்தி செய்தது எதிரி அல்ல என்றால் எதிரிதான் பூர்த்தி செய்து கையெழுத்து போட்டுள்ளார். எந்த நிற மையில் எழுதிக்கொடுத்தார் என்றால்

பச்சை நிற மையில் எழுதி கையெழுத்திட்டு கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் காசோலையில் கையெழுத்து தவிர மற்ற எழுத்துக்கள் எல்லாம் வேறு மையினாலும் வேறு எழுத்துக்களாலும் உள்ளதென்றால் சரிதான். நான் ஏற்கனவே சாந்தகுமாரிடம் இருந்த காசோலையை உறவினர் என்ற அடிப்படையில் பெற்று அவருக்கு சாதகமாக எதிரிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை வசூலுக்கு செலுத்தும்போது வசூலாகாது என்று அறிந்தே உள்நோக்கத்தோடு வேண்டுமென வழக்கு காசோலையை கொடுத்து எதிரி மோசடி செய்துவிட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான்தான் எதிரிக்கு எதிராக பொய்யான போலியான ஆவணத்தின் மூலம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதுகுறித்து எதிரி சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளார் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.